முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 131/2018

வாதி தரப்பு சாட்சி 1 தங்கவேல் திரு.ஆர்.ஞானசேகர்/திருமதி.ஏ.பிரோமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 15.07.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | குட்டியப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 65 |

**4, 11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வள்ளியம்மை மற்றும் கருப்பாயி இருவரும் சகோதரிகள் என்றால் சரிதான். ஆண்டியப்பன் கவுண்டர், செந்தா கவுண்டர் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். செந்தா கவுண்டரின் மகள் பட்டாயி என்றால் எனக்கு தெரியாது. ஆனால் அவருக்கு ஒரு மகள் இருக்கிறார். செந்தா கவுண்டரின் மகளின் கணவர் பெயர் முத்துசாமி என்றால் அது பற்றி தெரியாது. மாரியப்பன், வள்ளியம்மை, பழனியப்பன், பழனியம்மாள் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். 4, 5 பிரதிவாதிகள் முத்துசாமி, ஐயப்பன் இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் மாரியப்பன் என்றால் சரிதான். அந்த மாரியப்பனின் உடன் பிறந்தோர்கள் தான் வள்ளியம்மை, பழனியப்பன், பழனியம்மாள் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளுக்கு வள்ளியம்மை, பழனியம்மாள் ஆகியோர் அத்தைகள் என்றால் சரிதான்.

2. பழனியப்பன் சித்தப்பா ஆவார். மாரியப்பனின் தகப்பனார் பெயர் ஆலத்தூர் முத்துசாமி (எ) முத்துசாமி என்றால் சரிதான். மாரியப்பனின் தாயார் பட்டாயி என்றால் சரிதான். ஆண்டியப்ப கவுண்டர் மனைவி பெயர் வள்ளியம்மை என்றால் சரிதான். அவர்களுக்கு முருகாயி, ராக்காயி, முத்தம்மாள், பழனியம்மாள், வீரம்மாள், சிட்டு ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். முருகாயி கணவர் பெயர் பழனியாண்டி என்றால் சரிதான். முருகாயிக்கு முத்துசாமி, குட்டியப்பன், வீரம்மாள்

ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். முருகாயின் மகன் முத்துசாமிக்கு ராசம்மாள் என்ற மகள் இருக்கிறார் என்றால் சரிதான். ராசம்மாள் மகன் பெயர் சக்திவேல் என்றால் சரிதான். ஆரம்பத்தில் 212/10A , 212/10B. 212/10C, 212/10D, 212/10E, 212/10F. 212/10G மற்றும் 212/11A . 212/11B ஆகியவை ஆண்டியப்ப கவுண்டர், செந்தாகவுண்டருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் 5 ம் வகுப்பு படித்துள்ளேன்.

3. ஆண்டியப்பன் , செந்தா கவுண்டர் இருவரும் தனித்தனியாக பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். எப்போது பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு விவரம் தெரிவதற்கு முன்பு அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பாகம் பிரித்து கொண்டார்கள். மேற்படி பாகத்தில் ஆண்டியப்ப கவுண்டர் வகையராவிற்கு சில சொத்துக்களும், செந்தா கவுண்டர் வகையராவிற்கு சில சொத்துக்களும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். ஆண்டியப்ப கவுண்டர் குடும்பத்திற்கு பிரிந்த சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் எனது பாட்டி கிரையம் வாங்கினார்.

4. எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. எனது பாட்டி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 212/9 சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பெருமாள் மகன் முத்துசாமி 3 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. 212/11 சொத்து ஆலத்தூர் முத்துசாமி என்பருக்கு பாத்தியப்பட்டது என்றால் 4, 5 பிரிதிவாதிகளின் தகப்பனார் முத்துசாமிக்கு பாத்தியப்பட்டது. 212/10C என்பது கிணறு என்றால் சரிதான். அது பொது கிணறு என்றால் சரியல்ல. எனது பாட்டி கிரையம் பெற்ற பிறகு வெட்டினார். 212/11B ல் கோவில் உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி கோவில் இந்து கோவில் ஆகும்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**